# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 மடங்கல் (31-8-1988) ஓர் உருபா (இதழ் எண்: 109)

# 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' - என்பதைப் பாக்கித்தான் ஆட்சித் தலைவர் முடிவைப் பார்த்து இராசீவ் உணரவேண்டும்!

## நாட்டில் மக்களுக்கும் உரிமையில்லை! ஆட்சித் தலைவர்க்கும் உரிமையில்லை! இரு தரப்பினரும் அஞ்சி அஞ்சியே வாழ்ந்து வருகின்றனர்!

### மதங்கொண்ட யானை ஊருக்குள் புகுந்தது போல் உள்ளது நாட்டு நிலை!

### அறவுணர்வு மக்களுக்கு மட்டும் அன்று; ஆள்வோருக்கே அது வேண்டும்!

### நாடு கெட்டுக் குட்டிச் சுவராகிறது!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# குடியரசா, கொடி(ய)அரசா?

## அரசியல் அருவருப்பு!

இன்றைக்கு அரசியல் என்ற சொல்லே அருவருப்பாகி (ஆபாசமாகி) விட்டது. எல்லாருமே அதிகாரத்துக்கு ஆலாய்ப் பறக்கிறார்கள்!

— முன்னாள் குடியரசுத் தலைவர் சஞ்சீவி.
(குடியரசு நாள் உரை, பெங்களூர்.)

## ஊழல்! ஊழல்! ஊழல்!

ஓர் ஊழல் பேர்வழியை இன்னோர் ஊழல் பேர்வழி கட்டுப்படுத்துகிறான்; வெற்றி கொள்கிறான் என்பதே நாட்டின் நிலை.

ஆள் பிடிக்காமலோ, கையூட்டுக் கொடுக்காமலோ எதையுமே செய்ய முடியாது என்று ஆகிவிட்டது. தேர்தல் முறைகேடுகள் காரணமாக, ரேபெரெல்லி தொகுதியில் தேர்ந்தெடுக்கப் பெற்ற இந்திராவின் தேர்வு செல்லாது என்று 1975-இல் அலகாபாது உயர்நெறி மன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராகப் பேராயக் கட்சி அவரை ஆதரித்து நின்றது. சட்டமுறையான தம்முடைய கடமையை அவர் தந்திரமாக மீறியதன் மூலம் நாட்டின் அரசியல் அமைப்பு முறையையே அவர் சீர்குலைத்தார். அதன் விளைவையே நாம் இன்னும் பட்டுக் கொண்டிருக்கிறோம்.

'தனிமாந்த உரிமை' என்ற கட்டுக் கோப்பை இந்திரா அழித்து விட்டார். குமுகாய நெறி என்ற கருத்தை இராசீவ் அழித்து விட்டார்.

— குல்தீப் நையார்.

## நிலை மாறுமா? மாறாது!

பொதுவான குடியரசு வழியில் இப்பொழுதுள்ள நாட்டின் நிலைமையை அடியோடு மாற்ற முடியுமா என்பதுதான் கேள்வி. மாற்றுக் கட்சியினர் வெற்றி பெற்றாலும் நிலைமை மாறுமா? மாறாது என்றே நினைக்கிறேன்.

சட்டங்களை இயற்றிச் செயலுக்குக் கொண்டு வருவார்கள். பெரும் பொருள் செலவிடப்படும். கையூட்டு ஊழலின் கலப்பு இல்லாமலே இவையெல்லாம் நடந்தாலும் அமைப்பு முறை மாறுமா? நம்முடைய குமுகத்தின் நிலை மாறுமா? மாறாது என்றே நினைக்கிறேன்.

— செயப்பிரகாசு நாராயணன்.
(நெருக்கடி நிலை (1976)-இல் காவலில் வைக்கப்பட்டிருந்த பொழுது எழுதிய நாட் குறிப்பு.)

## கொள்ளைக்கார - கொலைகார ஆட்சி!

அந்தக் காலத்தில், கொள்ளைக்காரர்களுக்கும் கூட மக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருந்தது.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

(அண்மையில் தளைப்படுத்தப்பட்ட, நம் மகன் பொழிலனும் அவர் நண்பர்கள் சிலரும் மதுரை, நடுவண் சிறையில் காவலில் வைக்கப் பெற்றுள்ளனர். அங்கிருந்து பொழிலன் நமக்கெழுதிய மடல்கள் சில, அவர்களின் உணர்வுத் தெறிப்புகள், கருத்துகள் இப்பொழுதுள்ள நிலையில் எவ்வாறு இருக்கின்றன என்பதை உணர்த்துகின்றன. அவற்றை நம் அன்பர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவை இங்கு வெளியிடப் பெறுகின்றன; காலத்தால் உணர வேண்டிய கருத்துகள் சில அவற்றில் உள்ளனவா என்பதைப் பாருங்கள், மடல்கள் அனைத்தும் சிறையதிகாரிகளின் ஆய்வுக்குப் பின் நமக்கும் கிடைத்தவை. — ஆசிரியர்.),

17-7-88

மடல் : 1

மதுரை
நடுவண் சிறைச்சாலை.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு,

வணக்கம், தங்களின் மடல்கிடைத்து, ஒரு முறைக்குப் பலமுறை திரும்பத் திரும்ப அனைவரும் படித்தோம்.

எந்த ஒரு விடுதலையும் மக்கள் எழுச்சியிலேயே அமையும். அதற்குக் கடுமையான கருத்துப் பரப்புப் பணி செய்ய வேண்டும். அதற்கு மக்களிடையே இறங்கிப் பணி செய்ய வேண்டும் என்பதிலே உறுதியாகத் தெளிவடைந்துள்ளோம்.

உண்மையில் தங்களின் முப்பதாண்டுக்காலத் தனி உழைப்புக்குத் (துணையாக) நிறைய பேர் வந்தவர்கள், உண்மையாக முழுத் துணையுடன் இருந்திருப்பார்களானால், நம் விடுதலைக்காக நாம் ஒரு மக்கள் போராட்டத்தையே கண்டிருக்கலாம். அவ் வகையில் நாங்களும், தங்களின் கொள்கைக்குத் தங்களுடன் துணை நில்லாது, தனித்துச் செயல்பட்டதன் வழி, கடந்த சில முன் எச்சரிக்கையற்ற செயல்பாடுகளின் விளைவில் தேங்கி நிற்கிறோம். ஆனால், மக்களிடையே இறங்கிக் கருத்துப் பரப்பிப் பணி செய்ய இனி மிக நல்ல சூழல் இருப்பதாக எண்ணி, மிகத் தென்போடும், மகிழ்வோடும் உள்ளோம்.

இங்கு மதுரையில் பன்னிருவர் (இராவணன், ஈகை (ஈகவரசன்), இளங்கோ, குண (குணசேகரன்), குண்டலகேசி, இளமுருகன், முகிலன், சுகுமாறன், இனியன், பவணந்தி, தெய்வமணி, நான்) இருந்ததில், இராவணன் அண்ணன், தம் தனிப் பிணையலில் (Bail), 15-ஆம் பக்கல், சென்றுள்-

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பாக்கித்தான் ஆட்சித்தலைவர் (அதிபர்) சியா உல் அக் முடிவு யாரும் சற்றும் எதிர்பாராதது; இரங்கத்தக்கது. **'தக்கார் தகவிலர் என்ப(து) அவ ரவர் எச்சத்தால் காணப்படும்'** என்னும் திருக் குறள் வாழ்விலக்கணம் சியாவின் மறைவுக்கு இலக்கியமாகியது. பதினோராண்டுக் காலம் அவர் நடத்திய கொடுங்கோலாட்சிக்கு அவரின் முடிவு, அவரைப் போன்ற கொடியவர்க்கு எச்சரிக்கையாக அமைந்தது, பெரிதும் வியக்கத்தக்கது. இறப்பு எல்லார்க்கும் பொதுவானதுதான். ஆனால் அவர் முடிவு அவரைப் போலும் கொடியவர்களுக்கே இயல்பானது. தரையில் உடல் சாய்த்து உயிரைத் துறக்க வாய்ப்பில்லாமல், வானில் வெடித்துச் சிதறிச், சின்னு பின்னமாகச் சிதர்ந்து தெறித்த உடல் உறுப்புகளை அடையாளங் கண்டு பொறுக்கி ஒன்று சேர்க்க வேண்டிய அவல முடிவு நல்லவர் களுக்கு வருவதில்லை. வரவும் கூடாது.

**'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'** என்பது தமிழ்ச் சான்றோர் முடிவு. அதன் உண்மை பெரும்பாலும் தவறுவதில்லை. தவறியதாக உலகத் தார்க்கு ஒரு தோற்றம் தெரிவதானாலும், ஆராய்ந்து பார்ப்பார்க்கு உண்மை விளங்குவதாகவே இருக் கும்.

சியாவின் முடிவை இந்தியத் தலைமையமைச் சர் இராசீவ் பார்த்து உணரவேண்டும். அவர் முடிவு செயல் நிலையில் என்ன அடிப்படையைக் கொண்ட தாக இருந்தாலும், விளைவு நிலையில் மிகக் கொடுமை யானது; இழிவானது; அருவருப்பானது. அது போலும் முடிவுகளைப் பார்த்தே, ஒருவர் வாழ்க்கை நடைமுறை எப்படியிருந்தது, அல்லது இருந்தி ருக்கும் என்பதை முடிவு செய்து விடலாம்.

அறவுணர்வு பொதுமக்களுக்கு மட்டுமே உரிய தன்று; ஆட்சியாளர்க்கே அது மிக உரியது; முகாமையானது; மிகவும் இன்றியமையாதது என் பது தமிழர் அறம்!

நாட்டின் இன்றைய ஆட்சி நிலை நல்லவர்கள் வெட்கித் தலை குனிய வேண்டியதாக உள்ளது. அரசு நலன்களைக் கொள்ளையடித்தும், மக்கள் நலன் களை உறிஞ்சிக் குடித்தும், பொதுச் சொத்துகளைச் சுரண்டித் தின்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக் கும் குழுகாயக் கேடர்கள், ஆட்சியதிகாரர்கள் தவிர, வேறெவரும் மெச்சுகின்ற போக்கில் இங்கு அரசு நடக்க வில்லை என்பதை வெளிப்படையா கவே உணரமுடியும். ஆராய்ந்து பார்க்கக் கூடத் தேவையில்லை.

மக்கள் வெகுண்டு அஞ்சி அஞ்சி வாழ்கிறார் கள். அவர்களுக்கு இன்றைய நிலையில் முழு உரிமையில்லை. அவர்களை ஆள்கின்ற தலைவர்களுக் கும் வெளிப்படையாக இயங்குவதற்கு முழு உரிமை (சுதந்திரம்) இல்லை. காவலர்கள் நடுவிலும், குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டுகளிலும், எஃகுச் சட்டைகளை அணிந்துமே அவர்கள் உலாவரவும் நடமாடவும் வேண்டியுள்ளது. மதங்கொண்ட யானை ஊருக்குள் திமிர்ந்து ஓடினால், மக்கள் எப்படி அஞ்சி, அரண்டு ஓடி ஒளிவார்களோ அப்படி ஒரு வெருவுதல் தன்மை நாடு முழுவதும் பரக்கக் காணப்படுகிறது. இராசீவ் ஆட்சி அத்தனைக் கொடி யது; அவருடைய அன்னையின் ஆட்சியை விடக் கொடுமை வாய்ந்தது! கொடுங்கோல் ஆட்சி என் பது இப்படித்தான் இருக்கும் என்று வரலாற்றில் அழியாத இடம் பெறும் தன்மைகள் உடையது.

இராசீவைச் சுற்றியிருப்பவர்கள் அவரால் விளையும் ஆட்சிக் கொடுமைகளை அவர் அறிய விடாமல் ஒருவேளை தடுத்து நிற்கிறார்களோ என்று கூட எண்ணவேண்டியுள்ளது. அல்லது இராசீவின் இயல்பே கூட அதுவாக இருக்கலாம். ஆனால், மக்கள் அவரால் படும் கொடுமைகளை அவர் உணர் தல் வேண்டும்.

இயற்கை—அஃதாவது அறம் — ஓர் அரசாட் சியை நெறிப்படுத்த இயற்கை எத்தனையோ அறி விப்புகளை - எச்சரிக்கைகளை - அடையாளங்களைச் - செய்கிறது என்பதை அறவியல் நுட்பம் உணர்ந்த சான்றோர்கள் தெரிவித்திருக்கின்றனர். மதநிலையில் இவ்வுண்மை பருப்பொருள் அளவாய் இன்னும் விரி வாக்கிக் காட்டப் பெறுகிறது.

இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், இராசீவ் தம் ஆட்சியின் கொடுமைகளால் மக்கள்படும் துன்பங்களை உணர முடியும்.

நாட்டில் அண்மையில் பல இயற்கை அழிவு கள் நேர்ந்து வருவதை அனைவரும் உணரமுடியும். அசாமில் வங்காளத்தில் நேர்ந்த வெள்ளப் பெருக்கு கள், தில்லியில் கொடு நோய்களால் நேர்ந்து வரும் மக்கள் சாவுகள், அண்மையில் நடந்த நில நடுக் கங்களால் நேர்ந்த உயிரழிவுகள், ஊர் அழிவுகள் ஆகியவை அரசின் கொங்கோல் ஆட்சிக்கு ஏற் பட்டு வரும் இயற்கையின் எச்சரிக்கைகள் என்று அவர் கருதுதல் வேண்டும். இவ்வெச்சரிக்கைகளையும் மீறி இக் கொடுங்கோல் ஆட்சி அவ்வாறே இயங்கு மானால், அப்பொழுது தலைமையை அறமே சாய்க் கும் என்பதை இராசீவும் அவரைத் தவறாக வழி நடத்தும் மூப்பனார், சிதம்பரம், பூட்டாசிங் போலும் தம்பிரான்களும் உணர்தல் வேண்டும். 0

---

## வழக்குக் கொடை!

**சிறையில் உள்ளவர்களை வெளியில் கொணரவும், வழக்கு நடத்தவும் பொரு ளுதவி செய்யுங்கள். --ஆசிரியர், தமிழ்நிலம்.**

Scanned with CamScanner

# விடுதலைப் போரா? வன் செயலா?

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

1919-இல் பஞ்சாபிலுள்ள சாலியன் வாலாபாக் என்றவிடத்தில், இந்திய விடுதலை பற்றி ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அதைக் கலைக்கு மாற்றுன், ஆங்கிலேயக் காவற்படை வேட்டகச் சூடு நடத்தியது. அதில் பலர் மாண்டனர். அந் நிகழ்ச்சி சாலியன் வாலாபாக் படுகொலை என வரலாற்றேடுகளில் குறிக்கப்படுகிறது. அக்கால் பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநராக (governor) இருத்தவர் மைக்கேல் ஓடயர் என்பார். அன்னுர் இந்தியாவில் வேலை முடிந்து, தம் தாய்நாடான இங்கிலாந்துக்குத் திரும்பி, இலண்டன் மாநகரில் வாழ்ந்தார். உதம்சிங் (Udham Singh) என்ற இந்தியர் சாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பழி வாங்கும் எண்ணத்துடன் பலகாலம் அவரைத் தேடியலைந்தார். 1940-இல் மைக்கேல் ஓடயரை இலண்டன் மாநகரில் சுட்டுக் கொன்றுர். ஆங்கிலேய அரசு அவரைத் தளை செய்து கொலைக்குற்றம் சாட்டியது. ஆங்கிலேய அறமன்றம் அவருக்குக் கொலைத் தண்டனை வழங்கியது. 1940-இல் உதம் சிங் தூக்கிலடப் பட்டார். 34 ஆண்டுகட்குப்பின், 1974-இல் இந்திய அரசு அவரின் எலும்புகளை இலண்டனிலிருந்து புது தில்லிக்குக் கொண்டு வந்தது. தலைமையமைச்சர் இந்திரா காந்தி உதம் சிங்கின் எலும்புகளை அரச மதிப்புடன் வரவேற்றுர். உதம்சிங்கைப் பெரும் ஈகி(தியாகி) எனப் பாராட்டிப் புகழ்ந்தார்.

ஆங்கிலேயே அரசின் கண்களுக்குக் கொலை காரனுகப் பட்ட உதம்சிங், இந்திய அரசின் கண்களுக்கு ஈகியாகவும், விடுதலை வீரனுகவும் படுகிறுர். உதம்சிங் விடுதலை வீரனென்றுல், தமிழ் விடுதலைப் படையைச் சேர்ந்த தமிழரசன், செகநாதன், தருமலிங்கம், அன்பழகன், பழனிவேல், (தாளிகைகளில் வெளிவந்த பெயர்கள் இவை) ஆகியோரும், பிற மறவரும் விடுதலை வீரர்களாகக் கருதப்படாத தேன்? இவர்கள் ஏன் கொடுமைக்காரர்கள் எனத் தூற்றப் படுகிறுர்கள்? இந்திய அரசின் வானுலியும், வானெளியும் தமிழரசன், செகநாதன், தருமலிங்கம், அன்பழகன், பழனிவேல் ஆகியோரையும் பிற தமிழ் விடுதலைப் படையினரையும் கொடுமைக் காரர்களென வாய் கிழிய ஏசுவதேன்? அதைப் பின்னெட்டி, செய்தித்தாள்கள் பலவுங் கூட தமிழ் விடுதலைப் படையினரைக் கொடுமைக் காரர்கள் எனக் கூறுவதேன்? இவர்களெல்லாரும் இவ்வாறு ஒட்டு மொத்தமாகக் கூறுவதைக் கேட்டுத் தமிழர் பலரும் கூட தமிழ் விடுதலைப் படையினரைக் கொடுமைக்காரர்கள் எனக் கருதுகிறுர்களே! இது தான் நம் நெஞ்சை வருத்துகிறது.

தமிழர்கள் இது குறித்து நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்விடுதலைப் படையினர் தந்நலங் கருதி எச்செயலிலும் ஈடுபடவில்லை. இவர்கள் நல்ல வேலை வசதிகளும், ஊதியங்களும் பெற்று நல் வாழ்வு நடத்தியவர்கள். தமிழினம் எக்கேடோ கெட்டுப் போகட்டும், நாடும் நம் பெண்டு பிள்ளைகளும் இன்பவாழ்வு நடத்திஞல் போதும் என்றெண்ணுமல், தமிழின நலங்கருதிச் செயலில் ஈடுபட்ட ஈகப் பெருமக்கள் இவர்கள். இன்று கொடுமைக்காரர்கள் என்று தூற்றப் படலாம். குற்றவாளிகள் எனக் கொல்லப்படலாம்; கொடுமைப் படுத்தப் படலலாம். ஆனுல் தமிழகத்தின் உண்மையான வரலாறு எழுதப்படும் போது தமிழரசன், செகநாதன், தருமலிங்கம், அன்பழகன், பழனிவேல், மற்றும் தற்போது தங்கள் பெயர் வெளியே வராமல் கமுக்கமாகச் (இரகசியமாகச்) செயல்படும் பிற மறவர்களின் பெயர்களும் பொன் னெழுத்துகளில் பொறிக்கப்படும்.

ஆங்கிலேயரிடமிருந்து அமெரிக்கா விடுதலை பெற வேண்டுமெனப் போராடிய சார்சு வாசிங்டனை ஆங்கில அரசு நாட்டு இரண்டகன் (துரோகி) எனக் குற்றஞ் சாட்டியது. இன்ரு அவர் அமெரிக்க விடுதலை வீரர் என்று அழைக்கப் படுகிறுர். அமெரிக்காவின் தலைநகருக்கு அவரது பெயர் சூட்டப் பட்டுள்ளது. அவரது படமும், மற்ற விடுதலை வீரர்களின் படங்களும் அமெரிக்காவின் பணத்தாள்களை (currency) அழகுபடுத்துகின்றன.

இன்னுென்றையும் இங்கே நாம் எடுத்துக் கூற விரும்புகிறேம். தென் ஆப்பிரிக்க நாட்டில் (South Africa) வெள்ளையரும், கருப்பரும் (ஆப்பிரிக்கர்) வாழ்கிறுர்கள். ஆனுல் ஆட்சி முழுவதும் வெள்ளையரிடமே இருக்கிறது. கருப்பர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறுர்கள். கருப்பரின் ஆப்பிரிக்க விடுதலைப்படை அரசு நிலையங்களையும், பேருந்துகளையும், புகைவண்டித் தொடர்களையும் வெடிவைத்துத் தகர்த்து வந்துள்ளன. வெள்ளையரின் அரசு, இவ் விடுதலைப் படையினரைக் குற்றவாளிகளெனவும், கொடுமைக் காரரெனவும் கூறி வேட்டையாடி வருகிறது. ஆனுல் ஆப்பிரிக்க விடுதலைப் படையினர் குற்றவாளிகளல்லர், கொடுமைக் காரரல்லர், உண்மையான விடுதலை வீரர்கள் என இரசீவ் காந்தி அடிக்கடி கூறுகிறுர். அது மட்டுமன்று. பலகோடி உருபாக்களை ஆப்பிரிக்க விடுதலைப் படைக்கு நன்கொடையாகக் கொடுத்துள்ளார்.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

தொடர் : 6.

# "தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

எனவே தில்லியரசு 1972-இல் தமிழீழத் தனி நாடு கோரிக்கை எழுந்ததும், அக் கோரிக்கை தனது கொள்கைக்கு எவ்வகையில் வாய்ப்புள்ள-தாக அமையும் என்பதை எதிர்ப்பார்த்துக் காத்துக் கிடந்தது. அதைப்பற்றி வினவெழும்பிய போதெல் லாம் அதை இனச்சிக்கல், உள்நாட்டுச் சிக்கல், எனக் கூறி வந்தது.

1977-க்குப் பிறகு தமிழீழப் பகுதிகளில் பரந்த அளவில் அங்குமிங்குமாகக் கருவிப் போர் முறை வலுவடைந்து. பின் 1983-இல் இலங்கை யரசு திட்டமிட்ட ஓர் இனப்படுகொலையைக் கட்ட விழ்த்து விட்டதன் பலனுகத் தமிழர்கள் பேரளவில் உயிர்களையும், உடைமைகளையும் பறிகொடுத்து விட்டு, உயிருக்கு அஞ்சித் தமிழகத்தில் ஏதிலி (அகதி)களாக வந்து குடியேறத் தொடங்கினர்.

இதை இலங்கையின் மீது தனது மேலாளு-மையை நிறுவ வேண்டும் என்றெண்ணிக் காத்திருந்த தில்லியரசு, தனக்கு வாய்ப்புள்ளதாக மாற்றும் வேளைகளில், அஃதாவது சூழ்ச்சிகளில் இறங்கியது. எனவே அ்து ஈழத் தமிழ் மக்களை அனைத்துலக நாடுகளின் உடன்படிக்கைப்படி ஏதிலி (அகதி)களாக ஏற்று, அவர்களுடன் தமிழகம் வந்த போராளிகளுக்குப் பயிற்சித் தாவடி(முகாம்) களை, அமைத்துக் கொடுத்துப் பயிற்சியையும் கருவி களையும் வழங்கி உதவியது. இவ்வாறு உதவியது தமிழீழ விடுதலைக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தினுல் இல்லை; இலங்கை மீது தனது கட்டுப்-பாட்டைக் கொண்டு வர வேண்டும் எனும் நோக்-கத்தினுலேயே ஆகும். இவ்வாறு ஈழப் போராளி களுக்கு உதவுவது போல் நடித்துப் பின் வெளிப்-படையாக, **"இலங்கையில் தோன்றியுள்ள இனச் சிக்கலால் இலங்கை இரண்டாகப் பிரிவதை இந்தியா ஒரு நாளும் ஏற்காது. எனினும் இலங் கைத் தமிழர்கள் இலங்கையில் மீண்டும் உரிமை களுடன் வாழ இந்தியா தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்"** என அறிவித்து, ஈழப் போராளி களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. இதன் பிறகே தனது மேலாளுமை வெறிக் கொள்-கைக்கு "நல்லெண்ணத் தூது" வடிவம் கற்பித்து இலங்கையரசுக்கு வலை விரித்தது.

இதனுல் இலங்கையரசு திம்புப் பேச்சுரைக்குப் பணிந்தது. தில்லியரசு **தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்** எனக் கூறியது போலவே அப் பேச்சுரை அமைந்தது. அதில் "தமிழீழத்தையே" வற்புறுத்திப் பேச்சுரைக்குத் தடையாக இருப்பதா கக் கூறி, ஈழப் போராளிகளின் தலைவர்களை நாடு கடத்தி ஆணையிட்டது. இதன்மூலம் அத்தில்லியரசு தனது மேலாளுமை வெறியை இலங்கையில் நிறுவு வதை உறுதி செய்து கொண்டது.

அதன் தொடர்ச்சியாகவே பிற பேச்சுரை களும் தொடர்ந்தன. அதன் விளைவாகவே இன்று ஈழப் போராளிகளைத் தில்லியரசே ஒடுக்கி, அவ் வொடுக்கலையே நயன்மைப் படுத்தி, இலங்கையர சுக்கு உதவுவது போல் ஓர் உடன்பாட்டை உரு வாக்கித், தனது படைகளை இறக்கிக் கொண்டதன் மூலம், தனது மேலாளுமை வெறியைத் தமிழீழத்தில் தில்லியரசு நிறுவி விட்டது. அ்து இனி இலங் கைக்கும் விரியும். மெல்ல மெல்ல இலங்கையைத் தில்லியரசுக்கு அடிமை நாடாக மாற்றும்.

இந்திய(ய) அரசு போராளிகளின் தலைவர்-களை நாடு கடத்தி ஆணையிட்ட போதே, இந்தியப் படைகள் ஈழப் போராளிகளை ஒடுக்காலம் என்பது-தெளிவாகியது. அ்து இந்தி(ய) — இலங்கை உருவான பின்பு, தமிழீழ விடுதலைப் போராளிகள் இனி இந்தியப் படைகளினுல் அழித்து ஒழிக்கப் படுவர் என்பது மறுக்க வியலாதஓர் உண்மையாக வெளிப்பட்டு விட்டது. இதை அந்த இந்திய — இலங்கை உடன்பாட்டின் 2-16-ஆவது பிரிவே,

"இந்த உடன்பாட்டுத் திட்டங்களை இலங்கை யில் செயற்படும் **எந்தவொரு போராளிகளின் குழுவும் ஏற்றுக் கொள்ளாத நிலையில், இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும்** இந்தத் திட்டங்கள் ஏற்பாடாக (நிபந்தனையாக)க் கொண்டுள்ளன."

—எனக் கூறி மறுக்கவியலாத வகையில் ஒப்புக் கொள்கிறது. எனவே இதைச் செயற்படுத்த, இந்திய அரசப்படைகள் இலங்கைக்குச் செல்லும் என்பதை யும், அப்பிரிவின் 3-ஆவது துணைப் பிரிவு,

"இந்தத் திட்டங்களை நடைமுறைப் படுத்த **படையுதவி** (Military assistance) **வழங்கும் படி இலங்கையரசு இந்திய அரசிடம் கோரிய உதவியைக் கோரிய நேரத்தில் வழங்கி ஒத்து ழைப்புத் தரும்"**

— எனக் கூறித், தனது படைகளின் மேலாளுமை உறவை வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறது. இதன் படியே இலங்கை அரசு உடன்பாட்டில்

Scanned with CamScanner

கையெழுத்திட்ட மறுநாளே, இந்தி(ய) அரசிடம் படையுதவி கோரியது. இந்தி(ய)த் தில்லியரசும் பெருந்தன்மையுடன் தனது அரசப்படைகளை வழங்கித் தனது வல்லரசு மேலாளுமையை இலங்கையில் நிறுவி விட்டது.

இவ்வாறு **சூழ்ச்சிகளின் மொத்த விளைவால் ஈழத் தமிழர்களின், ஈழப் போராளிகளின் தமிழீழம் பகற்கனவாய்ப் போனதுடன் மட்டுமல்லாமல், சிங்கள மக்களின் எதிர்கால வாழ்வும் கேள்விக் குறியாகும் ஏதம் (அபாயம்) உருவாகி விட்டது.**

## தில்லியின் சூழ்ச்சிகளுக்குப் போராளிகள் இரையானதன் பின்னணியும் தவறுகளுந் தாம் என்ன?

1975 முதலே தமிழீழத்தில் அங்குமிங்குமாகக் கருவியேந்திய போராளிகளின் குழுக்கள் வளரத் தொடங்கின. இவ்வாறு போராடிய குழுக்கள் 1983- சூலை இனப்படுகொலைகுப் பின் தமிழகம் வந்த போது, ஏறத்தாழ 32 குழுக்கள் இருந்தன. அவற்றுள் பெரிய இயக்கங்களாக முன்னர் கூறிய ஐந்து இயக்கங்களும் இருந்தன.

இவை அனைத்துக்குமான அடிப்படைக் கொள்கை தமிழீழ விடுதலையே என்றாலும் தாங்கள், பின்பற்றும் கொள்கைகளாலும், நடைமுறைகளாலும் வேறுபட்டிருந்தன. **பொதுவாக எல்லா இயக்கங்களுமே தமிழீழத்தின் விடுதலைக் கொள்கையுடன் ஒப்புரவியக் (Socialist) குமுகத்தைக் கூட்டுவித்தல் என்பதையே தங்களுடைய அரசியற் கொள்கையாக ஏற்றிருந்தன. ஆனால் அக் குழுக்கள் கொண்டிருந்த நடைமுறைச் செயற் கொள்கைகள் வேறுபாடு உடையனவாக இருந்தன.** இ்து ஈழப் போராளிகளுக்கிடையே இருந்த கொள்கை வழியிலான பெரும் பிளவாகும்.

எனவே அவற்றுள் சில அமைப்புகள் கரந்தடிப் (Guerrilla) போர் முறையைத் தங்களுடைய போராட்டச் செயல் உத்தியாகவும், சில அமைப்புகள் படையெழுச்சிப் (Insurrection) போர் முறையைத் தங்களுடைய போராட்டச் செயல் உத்தியாகவும் கொண்டிருத்தன. குறிப்பாகக் கூற வேண்டுமானால் **'பிளாட்'** போன்ற இயக்கங்கள் படையெழுச்சிப் போர் முறையை முன்வைத்துக் கரந்தடிப் போர் முறையை முற்றிலுமாகப் புறந்தள்ளி வந்தனர். 'புலிகள்' போன்ற இயக்கங்கள் கரந்தடிப் போர் முறையை முன் வைத்துப் படையெழுச்சிப் போர் முறையைப் பின்னுக்கு வைத்துத் தங்களது போராட்ட உத்திகளை வரித்திருந்தனர்.

எனவே இவர்கள் தங்கள் போராட்ட உத்திகளுக்கேற்பப் போராடும் அமைப்பை உருவாக்கும் கொள்கையிலும் வேறுபட்டிருந்தனர். **சில இயக்கங்கள் அப்பட்டமான ட்ராசுக்கியப் பார்வையில் தேசிய விடுதலைக்கு "ஒரு கட்சி"யைக் கட்டுவித்து, அதன் மூலமே தமிழீழத்தின் விடுதலையைப் பெற வேண்டும் என எண்ணினர். சில இயக்கங்கள் கரந்தடிப் போருக்கேயுரிய "வென்றெடுத்தல்" முறையிலான 'கரந்தடி இயக்கம்" ஒன்றை உருவாக்குவதன் மூலமே தமிழீழத்தின் தேசிய விடுதலையை வென்றெடுக்க முடியும் என நம்பினர்.** இ்து ஈழப் போராளிகளுக்கு இடையே இருந்த அமைப்பு வழியிலான பெரும் பிளவாகும்.

இவ்வாறு இவர்கள் 'தமிழீழ விடுதலை' என்ற நோக்கத்திற்காகப் போராடி வந்த போதிலும், மேற்கூறிய இரு பெரும் பிளவுகளால் வேறுபட்டுப் பிரிந்து நின்றனர். **1983-இனப் படுகொலைக்குப் பின் இவர்கள் இருந்து இயங்குவதற்குரிய பின்னிலமாக (Rare) தமிழகம் அமைந்தது. அ்து இவர்கள் ஒன்று கூடி ஒரே செயல் திட்டத்தின் கீழ்த் தம்மை ஒருங்கிணைத்துக் கொண்டு செயற்படும் வாய்ப்பை ஏற்படுத்தியது. ஆனால் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளாமல், இவர்கள் தங்கள் தங்கள் பாதையிலேயே செல்லத் தொடங்கினர். இதனால் இவர்கள் தம்முடைய நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளத் தவறி விட்டனர்.**

இவ்வாறு இவர்கள் செல்லத் தொடங்கியதே தில்லியரசு இக்குழுக்களைத் தன்வயப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. இவ் வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்ட தில்லியரசு இவர்களின் போராட்ட உத்திகளுக்கேற்பப் பயிற்சியை அளித்து இவர்களைத் தன்வயப்படுத்திக் கொண்டது.

எனினும் அத் தில்லியரசு வெளிப்படையாகத் **"தான் தமிழீழத்தை—இலங்கையிலிருந்து தமிழீழம் பிரிவதை — ஒரு நாளும் ஏற்க இயலாது"** என்று அறிவித்துத் தான் தமிழீழத்துக்கு எதிரி என்பதைப் போராளிகளுக்கு அறிவுறுத்தியது.

தில்லியரசின் உண்மையான நிலைப்பாட்டை அறிந்த பின்னரும் **இப்போராளிகள் தங்கள் குழுக்களுக்குத் தங்களின் போராட்ட உத்திகளுக்கேற்பப் பயிற்சியை இந்தி(ய) அரசிடம் பெற்று வந்ததானது,** இவர்கள் தில்லி அரசு விரித்த சூழ்ச்சி வலைக்குள் சிக்குவதற்கு முகாமைக் கரணியமாக அமைந்தது. எனினும் இப்போராளிகள் தில்லி இந்தி(ய) அரசைத் தந்திரத்துடன் பயன்படுத்தி வருவதாகக் கூறிவந்தனர்.

இவ்வாறு அவர்கள் கூறிக் கொண்டு மீண்டும் மீண்டும் தில்லியரசின் அரவணைப்பிலேயே வளர நினைத்ததன் மூலம், இந்திய உளவுப் படை "ரா" இவர்களை ஊடறுத்து, இவர்களைப் பிளந்து தில்லியரசுக்குக் கட்டுப்பட்டவர்களாக மாற்றும் தந்திரத்துக்குப் பயன்பட்டனர். (தொடரும்.)

# அன்றைய இசுடாலின் இன்றைய இராசீவ்!

(**ஆசிரியர் குறிப்பு:** இசுடாலினைப் பற்றிப் புதுப் புதுச் செய்திகள் வந்து கொண்டுள்ளன. அவருடைய அரசியல் வல்லதிகாரங்கள், மக்கள் அழிவுகள், சூழ்ச்சிகள் பல, இன்றைய இந்திய வல்லதிகாரத் தலைமையமைச்சர் இராசீவுக்கு மிகவும் பொருந்தியனவாக உள்ளதைக் கீழ்வரும் கட்டுரையில் உள்ள இசுடாலினைப் பற்றிய செய்திகளை வைத்து ஒப்புநோக்குவார்க்கு விளங்காமல் போகாது.)

சோவியத்து மக்கள் பலரும், இசுடாலினது பெயரைப், பலரின் உயிர்களைப் பறித்த கடும் அடக்கு முறைகளுடனேயே தொடர்புபடுத்திப் பார்க்கிறார்கள். ஆனால் 1930-கள் பெரும் செயல் விளைவுகள் நிகழ்ந்த ஆண்டுகளாகவும் இருக்கின்றன. தினிப்பார் ஆற்றின் மீது மிகப் பெரியதொரு நீர்மின் நிலையம், மக்னிதோதார்சுசில் ஓர் இரும்பு உருக்குத் தொழிற்சாலை, இசுடாலின்கிராடில் ஓர் உழவூர்தித்(டிராக்டர்) தொழிற்சாலை, செலியாபின்சுக், கார்கோவ் மற்றும் பிற தொழிற்சாலைகள் கட்டப்பட்டதும், சோவியத்துப் பொருளியல் அடித்தளம் அமைக்கப்பட்டதும், எல்லாவற்றுக்கும் மேலாகத் திண்ணூர்தி (கனரக)த்தொழில்களுக்கு அடித்தளம் அமைக்கப்பட்டதும் அந்தக் கால கட்டத்தில்தான். எனவேதான், இசுடாலினின் குற்றங்களைக் கண்டிக்கிற அதேசமயத்தில், அந்த ஆண்டுகளில் சோவியத்து ஒன்றியம் புரிந்த கண்கூடான செயல்திறன்களையும் சிக்கலுக்கு உரியதாக்குவது தவறு. இசுடாலினையும், அவரின் நெருங்கிய தோழர்களையும் பற்றிய மதிப்பீட்டைக் கட்சி முழுவதுக்குமே இயந்திரத் தன்மையில் விரிவாக்குவதும் தவறாகும். இவ்வாறு பெருமைமிகு சோவியத்து மெய்யியல் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் திமித்ரி வோல்கோகொனோவ் கருத்துத் தெரிவித்தார். இவர் தற்போது **"சோசப் இசுடாலின் — அரசியல் வாழ்க்கைச் சித்திரம் வெற்றிகளும், துயரங்களும்"** என்ற தலைப்பில் புதிய நூல் ஒன்றினை எழுதி வருகிறார்.

வரம்பற்ற அதிகாரத்தைத் தமது கைகளில் வைத்துக் கொண்டும், குடிநாயகக் கட்டுப்பாடுகளுக்கு வெளியில் நின்று கொண்டும் இருகிற ஆள்கள், தாங்கள் ஒருபோதும் தவறிழைக்க மாட்டோம் என்றும், தாங்கள் மேலானவர்கள் என்றும், தாங்கள் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்றும் நம்புகிறார்கள். தமது ஆற்றல்கள் திறமைகள் குறித்து அவர்கள் மிக அதிக நம்பிக்கை கொள்கிறார்கள். இசுடாலின் செய்தியிலும் இவ்வாறுதான் நடந்தது. மறுபுறத்தில், இரண்டாம் உலகப் போர் வேளையில் இலக்கக்கணக்கான மக்கள் இசுடாலினை, மிகு வலிமை படைத்த மீமிசை மாந்தனாக ('சூப்பர் மேனாக')க் கருதினார்கள்; நிகருடைமையில் உயிர் வாழும் மொத்த வடிவமாக அவரைப் பார்த்தார்கள். மக்கள் தலைவர் ஒருவரைத் தொழுது வழிபடும் போது, அனைத்துச் செயல் திறங்களுக்கும் அவரும் அவரது அறிவாற்றலும் காரணம் என்றும், குறைபாடுகள் எதிர்மறைப் போக்குகள் அனைத்துக்கும் எதிரிகளே காரணம் என்றும் விளக்கம் கூறித் தொடங்குகிறார்கள். சோவியத்து மக்களின் தேசப் பற்று மற்றும் அனைத்துத் தேசிய உணர்வுடன், ஆட்சி நிறுவனங்கள் பலவற்றின் வறட்டுரிமைக் கொள்கை மற்றும் அதிகாரப் பிரிவுப் போக்கு இணைந்திருந்த நிலை அது.

சோவியத்து ஒன்றியத்தில் நிகருடைமையை நிலை நிறுத்த பெரும் பணியாற்றிய இசுடாலின், ஆட்சி அதிகாரத் தேர்வில் வெற்றி பெறவில்லை என்று வோல்சோகொனோவ் எழுதுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, பொதுவான பொதுமாந்தப் பண்புகள் குறித்த அவரது அணுகுமுறையைப் பொறுத்த வரையில் இ்து உண்மையாகும். இசுடாலின் அவரின் அரசியல் எதிரிகள்பால் மிகக்கொடுமையாக நடந்து கொண்டார். தம்மை ஆதரிக்காத ஒவ்வொருவரையும் அவர் எதிரியாகக் கருதினார். கண்ணை மூடிக் கொண்டு கீழ்ப்படிவதே கடமை என்று அவர் கொண்டிருந்த கருத்து. மாந்த உரிமைகள் பற்றிய செய்தியிலும் வல்லாண்மை செலுத்தியது.

இசுடாலின் பாணி தனியாளர் வழிபாடு, நிகருடைமையின் தவிர்க்க முடியாத் தன்மை அன்று என்று எல். இலொயத்னிக்கோவ், 'மாசுக்கோ செய்தி' என்னும் செய்தித்தாளில் எழுதியுள்ளார். முதலாளிய அரசோ, நிகருடைமை அரசோ அல்லது வேறு எந்த அரசோ — அரசின் தன்மை எப்படியிருந்த போதிலும், அது குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டங்களை கடந்து செல்லுகிறது. இரண்டு முறை அது வலிவின்மையை வெளிப்படுத்துகிறது. முதல் முறை அது தோன்றும் போதும், இரண்டாவது முறை, அ்து அதன் இறுதியை நெருங்கும் தறுவாயிலும் வலிவின்மையை வெளிப்படுத்துகிறது. எந்த ஒரு குமுக அமைப்பும், தான் நிலைத்து நிற்பதற்கு ஏதம் ஏற்பட்டுள்ளது என்று உணருமானால் அனைத்ததிகாரத்தை நோக்கிச் சாய்கிறது. 1930-களில் செர்மனியில், முதலாளிய ஆட்சிக்கு நிகருடைமை இயக்கத்தின் வளர்ச்சி அச்சுறுத்தலாக விளங்கியபோது, அதனைத் தவிர்க்கும் வழியாக இட்லரின் வல்லதிகாரத்தை முதலாளிகள் கண்டனர். 1960-களில் கிரீசு நாட்டில் புரட்சி நிலை மாற்றங்கள் ஏற்படும் என்ற அச்சுறுத்தல் நிலவிய போது, 'கறுப்புத் தளபதிகள்' ஆட்சியைக் கைப்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி - 3

இரண்டாம் உலகப் போருக்குப்பின் பிரிட்டிசால் ஏற்பட்ட கடும் பொருளியல் நெருக்கடியின் விளைவாகவும், பிரிட்டிசு குடியிருப்பு நாடுகளில் வெடித்த விடுதலைப் போர்ராட்டங்களும் இந்தியத் துணைக் கண்டத்தில் வெள்ளையனே வெளியேறு என்று மக்களின் விடுதலைப் போராட்டங்களும் நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்ததால், இத் துணைக் கண்டத்தில் இனி நேரடி ஆட்சி செய்ய முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. இம் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு உரமிடுவது போல், மக்கள் சீனத்தின் விடுதலை நம்நாட்டில் விடுதலைக்குப் போர்ாடும் ஆற்றல்களை ஊக்கிவித்து உர மூட்டியது. பிரிட்டிசு மற்றும் தரகு முதலாளிக் கூட்டமும் இம்மக்களின் போராட்டம் பொதுவுடைமைப் பதைக்குத் திரும்பி விடுமோ என்று அஞ்சி நடுங்கியது. இக்கட்டத்தில் அமெரிக்கா புதிய தளபதியாக உலக அரங்கில் தலையெடுத்தது. குடியமர்த்த ஒழிப்புக் கொள்கையை முன் வைத்தாலும் இந்தியத் துணைக்கண்டத்திலும், தமிழகத்திலும் பிரிட்டிசு நேரடி ஆட்சி வல்லாண்மை முடிவுற்று அமெரிக்கா, பிரிட்டிசு, உருசியா, சப்பான், செர்மன் போன்ற நாடுகளின் சுரண்டலுக்கான வேட்டைக் காடாக மாற்றியமைத்தது. இவ்வல்லரசு நாடுகளின் சுரண்டலுக்கான கேடயமாக புதுக்குடியேற்ற வடிவத்தில் இந்தியா நாடும், நடுவண் அரசும் உருகாக்கப்பட்டன.

தமிழகத்தின் தேசிய முதலாளிய ஆற்றல்கள் முதலில் தனித் தமிழ் நாட்டுக் கொள்கையை முன் வைத்தலும், பின்னால் இக் கொள்கையை மாற்றித் திராவிட நாட்டுக் கொள்கையை முன் வைத்தலும் போன்ற நிலையில் இருந்ததால், தரகு முதலாளியப் பிரிவு பேரயக்கட்சித் தலைமை மூலமாக நயவஞ்சகத்துடன் இந்தியா என்னும் சிறைக் கூடத்துக்குள் தமிழகத்தை வலுக்கட்டாயமாக வலுவந்தத்தின் மூலம் ஒன்றிணைத்தது.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் நடத்திய தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்திற்குப் பின் தமிழ்க் குமுகத்தில் தோன்றி வளர்ந்த முதலாளிய ஆற்றல்கள் தென் மாநில உரிமைச் சங்கம், நீதிக் கட்சி போன்றவை தோன்றித் தேய்ந்தபின், திராவிடக் கட்சியாக உருவெடுத்தன. தமிழர் விடுதலை, தனித் தமிழ் நாடு கொள்கைகளை முன்வைத்து வளர்ந்தன. இக்கட்சி தமிழக விடுதலைக்கான எந்தச் செயல் பாட்டையும் நடைமுறைப்படுத்தாமல் பொதுக் கூட்டம், கருந்தரங்கு, மாநாடு என்று நின்று விட்டது. இந்தியப் போலி உரிமையையும் நடுவண் அரசையும் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தது. பழமைப் பிடிப்புள்ளதாக இருந்த இக் கட்சியின் தலைமை தமிழக விடுதலைக்கான போராட்டத்தை முன்னேடுக்கவோ அல்லது அடிபணியாமலோ திராவிடக் கட்சி தேக்கமுற்றது. இச்சூழ்நிலையில் தமிழகத்தில் வளர்ந்து வந்த முதலாளியக் கூறுகளுடன் இணைந்தது. இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டு திராவிடக் கட்சியில் இருந்து பிரிந்து தி. மு. க. உருவானது. இக்கட்சி இந்தியா அரசியல் சட்டத்துக்குட்பட்ட மாநிலத் தன்னாட்சிக் கொள்கையை முன்வைத்துத் தமிழக விடுதலையைக் கை கழுவி விட்டது. தி.மு.க. ஆட்சியில் வளர்த்து விடப்பட்ட தமிழகத் தரகு முதலாளியப் பிரிவு தி. மு. கவை உடைத்துத் தன் நலனைப் பாதுகாக்கும் அ.தி மு.க.வை உருவாக்கிற்று. நிலக் கிழமையின் மிச்ச சொச்சங்களையும் இந்தியா ஆளும் பிரிவையும் தகர்த்தெறிய இத் தமிழ்த் தேசிய முதலாளியப் பிரிவு வலுவிழந்து போனதால் தமிழ்த் தேசிய இனத்தை விடுவிக்க முடியாமல் போய்விட்டது.

தமிழகத்தில் தோன்றிய பொதுவுடைமைக் கட்சி நிலக் கிழமையையும் பியுட்டிசு வல்லரசையும் எதிர்த்துப் போராடித் தமிழகத்தை விடுவிக்க முடியவில்லை. பேராயக் கட்சியின் இரண்டகத்தை மக்கள் முன் அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்துவதற்குப் பகரமாக அக் கட்சியுடன் அது கூடிக் குலவியது. திராவிடக் கட்சிகளிடம் இருந்த நேரத்துக்குத் தக்க போக்கை முறியடித்து, இக்கட்சியிடம் இருந்த நல்ல தன்மைகளை வளர்த்தெடுத்தது: தமிழகத் தொழிலாளி இன விடுதலையை நிறைவேற்ற முடியவில்லை. சோவியத்தின் புரட்டல் கருத்துத் தலைமையைப் பின்பற்றி அணைத்து இந்தியத் தலைமை, ஆளும் இனத்தின் கூட்டாளியாகிப் பாராளுமன்றச் சாய்க்கடையில் கலந்ததைத் தொடர்ந்து தமிழ்ப் பொதுவுடைமைக் பாராளுமன்றச் சேற்றில் மூழ்கிப்போனது. (தொடரும்)

---

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி வல்லதிகார அரசை நிறுவ, கிரேக்க மேட்டுக்குடியினர் அனுமதித்தனர். இதே போல மேலும் பல எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும்.

குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், நிகருடைமையிலும் சரி முதலாளியத்திலும், சரி வல்லதிகாரம் தோன்றுவதற்காக வாய்ப்புகள் மிக வலுவாக உள்ளன. எனவே, வல்லதிகாரம் பொதுவுடைமையின் தவிர்க்க முடியாத் தன்மை என்று கூறுவது தவறாகும் என்று உலொபத்னிக்கோவ் எழுதுகிறார். ஆகவே, ஒரு தனி ஆளின் கையில் மிக மிஞ்சி அதிகாரங்கள் குவிவதைக் தடுக்க சட்டமுறையிலான உறுதிப்பாடுகளை உருவாக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆப்பிரிக்க விடுதலைப்படைக்கும் தமிழ் விடுதலைப் படைக்கும் என்ன வேறுபாடு என்று இரசீவ் காந்தி கூறமுடியுமா? ஆப்பிரிக்க விடுதலைப் படையினர் குற்றவாளிகளல்லர் என்றால், தமிழ் விடுதலைப் படையினர் மட்டும் ஏன் குற்றவாளிகளாகக் கருதப் பட வேண்டும்?

ஐம்பதாண்டுகளாகப் — பெரியார் காலந்தொட்டே நாம் அமைதியாக நம் உரிமைகளைக் கேட்டு வந்தோம். காவலரின் தடியடியும், வேட்டெஃகச் சூடுமே விடையாகக் கிடைத்தன. பெரியாரும் அண்ணாவும், கருணாநிதியும் இன்னபிறரும் திராவிட விடுதலை கேட்டு ஊர்வலம் நடத்தினார்கள்; பொதுக் கூட்டம் போட்டார்கள்; கருப்புக் கொடி காட்டினார்கள்; பட்டினி கிடந்தார்கள் (உண்ணாவிரதம்). அவை யாது பயனும் விளைக்க வில்லையே. ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் காவற்படையின் தடிபடிக்கும், வேட்டெஃகச் சூடுகளுக்குமே ஆளாயின. 1965-இல் தமிழகமே இந்தித் திணிப்பை எதிர்த்து எழுந்ததே. என்ன பயன் விளைந்தது? ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களைத் தமிழகக் காவற்படையும், வடமாநிலங்களிலிருந்து கொண்டு குவிக்கப்பட்ட காவற்படைகளும், இந்திப் படையும் சுட்டுக் கொன்றன.

1962-இல் தமிழக விடுதலை கேட்பதே குற்றமென்றும், அவ்வாறு விடுதலை கேட்போர் மாநிலச் சட்ட மன்றத்திற்கோ, பாராளுமன்றத்திற்கோ உறுப்பினனராக முடியாதென்றும் சட்டமொன்றைத் திணித்தது வட இந்திய அரசு. அமைதியாக உரிமை கேட்டு, மக்களின் ஒப்போலை மூலம் உரிமைபெற முடியாவிட்டால், இங்கு நடப்பதைக் குடியரசு என்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? அமைதியாக உரிமை கேட்டுப் போராடுவது குற்றமென்று அரசு கூறுமேயானால், தமிழின உணர்வு மிக்க தமிழ் மறவர்கள் தமிழ்விடுதலைப் படை அனைய இயக்கங்களில் சேர்ந்து செயல் படுவது தவிர்க்கவியலாதது. இந்நிலைகளையுணர்ந்து தமிழ் மக்கள் செயல் படுவார்களாக.

**தமிழ் விடுதலைப் படையைக் கலைத்துவிட ஒரே யொரு வழியுண்டு. இந்திய அரசு இன்னும் ஓர் ஆண்டில் தமிழ்நாடெங்கும் "தமிழ்நாடு தனித்து விடுதலை பெற்ற நாடாக விளங்க வேண்டுமா? அல்லது, இந்தியாவின் மாநிலமாக விளங்க வேண்டுமா?" என்ற கொள்கையை முன்வைத்துத் தேர்தல் ஒன்று நடத்த வேண்டும். அந்த இடைப்பட்ட ஓராண்டுக்காலத்தில், விடுதலை பெற்ற தமிழகம் வேண்டுமென்பாரும், தமிழ்நாடு இந்தியாவின் மாநிலமாக விருக்க வேண்டுமென்பாரும், தங்கள் தாங்கள் கருத்துகளைச் சொற்பொழிவுகள் மூலமும், தாளிகைகள் மூலமும் எந்த வகைத் தங்கு தடையுமின்றித் தமிழ் மக்கள் முன் வைக்க வேண்டும். பாதிக்கு மேலான தமிழ் மக்கள் தமிழ்நாடு விடுதலைபெற்றுத் தனி நாடாக அமைய வேண்டுமென்று ஒப்போலை அளிப்பார்களேயானால், வட இந்திய அரசு பெட்டி கட்டிக் கொண்டு தமிழ் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். பாதிக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் தமிழ் நாடு, தொடர்ந்து இந்தியாவின் மாநிலமாக விருக்க வேண்டுமென்று ஒப்போலை அளிப்பார்களேயானால், தற்போதைய நிலை தொடரட்டும். இந்திய அரசு இத்தகைய கருத்தெடுப்புக்கு வழி வகுக்குமா?**

# விழிப்புடன் ஆய்ந்தறிவீர்!

## (பாவலர். எழில்வாணன்)

*அரசியல் சாய்கடை அளவிலாப் புழுக்கடை*
*அருந்தமிழ் மக்களை அழிக்கிறது !*
*உரசிடும் விலங்கென உலவிடும் கழிசடை*
*உயர்ந்தவர் கொள்கையைப் பழிக்கிறது!*

*இன நலம் தமிழ்மொழி உயர்நலம் உணர்விலா*
*இழிகுலம் தனக்கென உயர்கிறது!*
*பண நலம் பெரிதெனப் பகட்டினில் திரிந்திடும்*
*பழிநிறை திரைமுகம் வளர்கிறது!*

*பதவியே குறியெனப் பழிசெயல் புரிந்திடும்*
*பயனிலா உருவமும் அலைகிறது!*
*உதவிகள் கிடைத்திடும் எனுமொரு நினைப்பினில்*
*உலவிடும் பலமுகம் மலர்கிறது!*

*இவற்றினை உணர்ந்தினி இழிந்தவர் செயலினை*
*எதிர்த்திட வருகவே தமிழினமே!*
*தவற்றினைப் புரிபவர் எவரென இருப்பினும்*
*தகர்த்திட முனைகவே துணிவுடனே!*

*ஒளியுடை 'தமிழ்நிலம்' நமக்கினி வாய்த்திடும்*
*ஒருநிலை உளதெனில் தமிழர்களே,*
*விழிப்புடன் எதனிலும் அறிவினைச் செலுத்தியே*
*விழுமிய தெதுவென ஆய்ந்தறிவீர்!*

## தெலுங்கு கங்கைத் திட்டம்:

இத்திட்டம் அறிவிக்கப்பெற்று 12 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் ஒரு சொட்டுத் தண்ணீருக்குக் கூட வழியில்லை. 1976-ஆம் ஆண்டிலேயே இந்திரா இதை அறிவிப்புச் செய்தார். ஆனால் இது வரை நடுவணரசு இதற்கு இசைவு வழங்கவில்லை. பல நூறு கோடி உருபா மதிப்புள்ள இத் திட்டத்திற்குத் தொடக்கத்தில் தமிழ்நாடு அரசு உரு 30 கோடி கொடுத்தது. அதுவன்றி ஆண்டு தோறும் தமிழ்நாடு வரவு செலவுத் திட்டத்தில் இதற்கு வேறு தொகை ஒதுக்கப்பட்டு வருவது வெறும் கண் துடைப்பும் வெட்கக் கேடானதும் ஆகும்.

Scanned with CamScanner

# பறம்பை அறிவன் பக்கம்!

## 1. இரசூல் கம்சதோவ்.

**இரசூல் கம்சு தோவு** பற்றிய ஓர் இலக்கிய அறிமுகம் 'ஞானம்பாடி' எழுதியுள்ளார். அதில் கண்ட குறிப்புகள்.

1. இரசுல் கம்சுதோவ் காகசிய மலைத்தொடரில் இருக்கும் சின்னஞ்சிறிய ஊரில் பிறந்தவர். இப்போது அவர் அகவை 61.

2. அவர் தாய்மொழி 'அவார்' இம்மொழிக்கு இலெனின் வரிவடிவம் தந்தார்.

3. "எனது தாய்மொழி நாளை இறந்துவிடும் என்றால் நான் இன்றைக்கே இறந்து போகிறேன்"
— **இரசூல் கம்சு தோவ்.**

4. புதிய வரிவடிவம் பெற்ற மக்கள் அதைப் பொருள்கள், கதவெல்லாம் கிறுக்கினர்.

5. அவார் மொழியிலேயே எழுதி, அது 27 மொழிகளில் வெளிவந்தது. 60 இலக்கம் படிகள் விற்றுள்ளன.

6. அவர் எழுதிய பாடல்களில் சில நறுக்கு வரிகள்.

"ஒழுங்கில்லாத சொற்களும் வரிகளும் செருப்புக்குள் நுழைந்த மணலைக் காட்டிலும் அதிகமாகக் காயப்படுத்துகின்றன"

"என்றாவது ஒருநாள் என்னை ஓர் மாழையாக (உலோகமாக) மாற்ற வேண்டி வந்தால்,

என்னை ஒரு நாணயமாக மட்டும் மாற்றி விடாதீர்கள்!

பேராசை மிக்க கண்களின் தாக்குதல்பட்டுப் பணப்பையில் சென்று பதுங்குவதை நான் வெறுக்கிறேன்!

ஒரு மாழையாக (உலோகமாக) மாற்றத்தான் வேண்டுமென என்பிறப்பு நெறி சொல்லுமானால், என்னை ஒரு குத்துவாளாகச் செய்து விடுங்கள். உறைக்குள் இருக்கையில் ஊழ்கத்தில் (தியானத்தில்) மூழ்கி, உருவி எடுத்திடில் எதிரியை அழிப்பேன்"

இரசூல் கம்சுதோவ் 'நேரு நினைவுப் பரிசு' — மற்றும்,இலெனின் நினைவுப் பரிசுக்' குரியவர் என்பதெல்லாவற்றையும் விட, அவர் தம் தாய்மொழியின் மீதும்,அம்மக்களின் 'வேலி'களை உடைப்பதன் மீதும் கொண்டிருக்கும் பற்றைப் பாராட்டலாம்'

## 2. மா ஓ சிந்தனையிலிருந்து!

பெரியார் சிந்தனையிலிருந்து, வள்ளுவர் வாய்மையிலிருந்து, பெருஞ்சித்திரனார் படைப்புகளிலிருந்து ...... தமிழர் கற்றுத் தெளிய வேண்டும். அதேவேளை, நம் நூற்றாண்டில் — காலத்தில் — நிலக்கிழமை, வல்லரசியப் பிடியிலிருந்து தம் மக்களை விடுவிக்கப் போராடிய, பொதுமைக் கட்சிக்குத் தலைமையேற்ற போராளி தோழர். மாஓவின் சிந்தனை, நமக்கு ஒரு துல்லியமான வழிகாட்டியாக அமையக் கூடும்!

தோழர் மா ஓ 1944-இல் ஆற்றிய ஓர் உரையில் பண்பாடு — கல்வி குறித்து அவர்தம் கருத்துகளை எடுத்தளிக்கின்றேன். ஆராய்க!

அன்றிருந்த சப்பான் வல்லரசியத்தைத் தூக்கி எறிவதை முதல்வேலையாக மக்களுக்கு அறிவித்தார் மாஓ.

முதலில் போர்; விளைவிப்பு (உற்பத்தி) அடுத்து; அதன்பின்பே 'பண்பாட்டுப்பணி' என்றார்! ஆயினும், அவர் போர்புரியும் படைக்கு வேண்டிய பண்பாட்டுத் தளத்தை மிக வலுயுறுத்திக் கூறுயுள்ளார்.

"An army without cultue is a dull — witted army, and a dull — witted army cannot defeat the enemy" — Mao —

பண்பாடு இல்லாத படை, மந்தமானது; மந்தமுள்ள படை, எதிரியை வீழ்த்தாது என்ற அவர்தம் கருத்துரை தமிழகத்துக் கட்சிகளுக்கும், இயக்கங்களுக்கும் பொருந்துவதே யாகும்!

நாம் பழமை, மரபு, மக்கள் பண்பாட்டினோடு முரண்டு கொள்ளாமல், அவற்றோடு இணைந்து கொள்ளுதல் வேண்டும். ஆனால், திறன்தெரிந்தும், தெளிந்தும் கற்பித்தும், கடந்து செல்லவும் வேண்டும். 0

# வேகின்றது ஒரு நெஞ்சம்!

பேரன்பின் பெருமை மிகு தமிழ்த்திரு ஐயா! தங்களை வாழ்த்தி வணங்குகின்றேன். நலம். நலமறிய அவா. **தமிழ்நிலம்** இதழ் கண்டேன். தங்களுக்கு உறு துணையாக இருந்த நம் அருந்தமிழ்த் தூய தொண்டர்கள் தளைப்படுத்தப்பட்டுள்ள செய்தியறிந்து மனம் நொந்து வேகின்றது.

இலங்கைத் தமிழர்கள் நாளும் அழிந்து வீழ்வதை எண்ணி யெண்ணி நைந்துருகும் நெஞ்சம் அழுது அழுது கண்ணீரெல்லாம் வற்றிவிடும் நிலையில் நம் தூய தென்மொழி நெஞ்சங்கள் சிறையில் வாடுவதை என்னால் தாங்கிக் கொள்ளாது வெடித்துச் சிதறிவிடும் போல் உள்ளது.

நம் அருமைத் தமிழ் நெஞ்சங்களை வெளிக்கொணர ஆவன செய்யுங்கள் ஐயா! அவர்களை வெளியில் கொண்டுவர - குற்றச்சாட்டுகளை வீழ்த்த என்னால் இயன்ற பொருளுதவியைச் செய்ய — ஆயிரம் உருபாக்களை என் அன்புக் காணிக்கையாக அனுப்பி வைக்கின்றேன். இன்னணம்,

உங்கள் அன்பை மறவாத,
— **மு. தமிழ் நெஞ்சன், இடங்கண்ணி.**

(குடியரசா, ...... தொடர்ச்சி)

கொள்ளையடித்த பொருள்களை இல்லாத மக்களுக்கும் கொடுத்து உதவுவார்கள். கொள்ளைக்காரர்கள் ஊருக்குள் வந்ததும் அவர்களை வரவேற்று விருந்து போட்டுச் சாப்பிட வைப்பார்கள். பிறகு பொருள்களைக் கொடுத்து மகிழ்ச்சியாக வழியனுப்பி வைப்பார்கள்.

ஆனால் இப்போது என்ன நடக்கிறது? ஆட்சியில் இருக்கிறவர்களே கொள்ளைக்காரர்களாக இருக்கிறார்கள், கொலை, கொள்ளை மலிந்து போய் விட்டன.

நல்ல வேளை, நான் வெள்ளைக்காரன் காலத்திலேயே வேலை பார்த்து, அவன் காலத்திலேயே ஓய்வு பெற்று விட்டேன். அதை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. அப்பொழுது துறக்கத்தில் (சொர்க்கத்தில்) இருக்கிற மாதிரி வாழ்ந்து விட்டு, இந்தக் காலத்தில் இப்படி வாழ வேண்டியதாக இருக்கிறது.

எல்லாரும் உரிமை (சுதந்திரம்) கிடைத்து விட்டதென்று சொல்லுகிறார்கள். அடிமையாக இருந்த காலத்திலே உரிமையாக (சுதந்திரமாக) இருந்தோம். ஆனால், உரிமையாக இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அடிமையாக வாழ்ந்து கொண்டு கிடக்கிறோம். — **சீனிவாசலு.**

*(107 அகவையுடைய முன்னாள் காவலர் 'மாலைமுரசு'க்கு அளித்த நேருரையில் (14-8-88)*

## தேர்தல் சீர்திருத்தங்கள்:

'தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தேர்தல் குழு பல தடவை அரசுக்குத் தெரிவித்த கருத்துகளை அரசு புறக்கணித்து விட்டது என்று தேர்தல் ஆணையர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந் நிலையில் தலைமையமைச்சர் இராசீவ் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து பேசியதாகக் கூறியுள்ளது மிகவும் பொய்யானதாகும்' என்று கருநாடக முதலமைச்சர் எக்டே தெரிவித்துள்ளார். 'தேர்தல் நடைமுறையில் பெருமளவு திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, இதைச் சிறிய செய்தியாக அரசு கருது வது கூடாது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## கல்வி கற்றால் வேலை இல்லை:

ஆண்டு தோறும் தமிழகக் கல்லூரிகளிலிருந்து இளங்கலை (பி. ஏ), இளம் அறிவியல் (பி. எசு .சி), இளம் வணிகவியல் (பி. காம்.) படித்துத் தேர்வு பெற்று வெளியே வருபவர்கள் தொகை ஏறத்தாழ 60,000 ஆகும். முதுகலைப் பட்டங்கள் பெறுபவர்கள் ஏறத்தாழ 6000. தமிழகத்தில் உள்ள 135 தொழிலியல் கல்லூரிகளிலிருந்தும் படித்துப் பட்டம் பெறுவோர் தொகை 20,000. இங்குள்ள 32 பொறியியல் கல்லூரிகளிலிருந்தும் ஆண்டு தோறும் பட்டம் பெறுவோர் 6000 பேர்.

ஆனால், ஆண்டுக்கு ஓரிலக்கம் பட்டம் பெறுவோர்களுக்குக் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்ற பணிகள் தர அரசால் முடியவில்லை. எனவே, இப்பொழுதுள்ள நிலையில் அரசு வேலை தேடித்தரும் நிறுவனத்தில் பதிவு செய்திருக்கும் பட்டம் பெற்றவர்கள் தொகை 25 இலக்கமாக ஆகியிருக்கிறது. இன்னும் பதிவு செய்யாமல் எத்தனைப் பேர் இருக்கிறார்களோ, தெரியவில்லை.

## 'எல்காட்' கடிகாரத் தொழிற்சாலை:

தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான மின்னணுவியல் கடிகாரத் தொழிற்சாலை(எல்காட்)யை மூடி விட முடிவு செய்யப் பெற்றுள்ளது. சப்பானியத் தொழில் நுட்ப உதவியுடன் ஆண்டுக்கு 2 இலக்கம் மின்னணுவியல் கடிகாரங்களைச் செய்து விற்கத் திட்டமிடப்பட்டு இத் தொழிற்சாலை அமைக்கப் பட்டது. ஆனால் திட்டமிட்டபடி இஃது இயங்கவில்லை. ஆண்டுக்கு 30 ஆயிரம் கடிகாரங்களைக் கூட இதனால் உருவாக்க முடியாமல் ஏறத்தாழ 8 இலக்கம் உருபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டது. மேலும் இக்கடிகாரங்கள் சரியானபடி விலை போகவில்லை. ஏழாவது திட்ட காலத்தில் இதற்கு அரசு போட்ட முதலீடு 10 கோடி உருபா. அரசின் திட்டங்கள் சரிவரச் செயல்படுத்தப் படுவதில்லை என்பதற்கு 'எல்காட்' ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

---

(ஒரு விடுதலை ...... தொடர்ச்சி)

ளார். அம்மா கொடுத்துச் சென்ற **தென்மொழி** இதழ்கள், இன்னமும் ஆய்வு செய்யப் பெற்று எங்களுக்குக் கொடுக்கப் பெறவில்லை. (Illustrated) Weekly இங்கு பெற வழியில்லை. அடுத்த முறை நேர் காணலுக்கு வரும் பொழுது கொடுத்தனுப்பக் கேட்டுக் கொள்கிறோம். **கனிச்சாறு** தொகுப்புகளும், என்னுடைய முன்னைய மடலில் எழுதியிருந்தபடி, (பக்க) எண்கள் இடப்பெற்ற எழுதுசுவடி, Oxford அகரமுதலி, **கற்பனை ஊற்று** நூல் - ஆகியவையும் கொடுத்தனுப்பக். கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்துச் சுமைகளையும் தாங்கள் ஒருவரே தாங்கிக் கொண்டு பணியாற்றுவது மிகவும் கவலையாக உள்ளது ...... உறுதியாக நான் வெளிவந்த பின் முழுத்துணையுடன், தங்களுக்குத் துணையாக இணைந்து உ. த மு க. பணிகளைச் செய்யத் திட்டமிட்டுக் கொண்டுள்ளேன். வழக்கறிஞர்களின் ஈடுபாட்டிற்கு, மிகுந்த மகிழ்வடைகிறோம். அவர்களின் செயல்பாட்டிற்கு, எங்களின் கொள்கை உறுதியே நன்றியுடைதாக இருக்கும். பிறகு எழுதுகிறேன்.

அன்பு மகன்.
**பொழிலன்.**

# எத்தனைக் கட்சிகள்?
# எத்தனைத் தலைமைகள்?

பாவலர். தமிழ்க் குமரன், ஈரோடு.

அன்னையாம்! புரட்சித் தலைவியாம்! அடடா!
எத்தனைக் கட்சிகள்! எத்தனைத் தலைமைகள்!!
இன்றைக்குப் போட்டி போட்டுக் கொண்டே
இவர்கள் வந்தனர்! இவர்கள் வந்தனர்!
உன்னையும் என்னையும் வாழ வைக்கவா?
ஒருபோது மில்லை, ஒருபோது மில்லை.
முன்னர் ம. கோ. இரா அடித்த கொள்ளையில்
முடியாமல் விட்டதை முடித்திட முந்துவார்!

வண்ண வண்ணச் சுவரொட்டி யடித்து
வழுவாது கடமையில் கண்ணுங் கருத்துமாய்
எண்ணம் செயல்கள் எல்லாம் தமிழரின்
ஏற்றத்திற் கென்றே மேடையில் முழக்கி,
உண்ணச் சோறும் உருபாயும் கொடுத்தே
ஊர்கள் தோறும் மக்களைத் திரட்டி!
கண்டு களியுங்கள், கண்டு களியுங்கள்,
கடைகெட்ட தமிழரே! காவடி தூக்கி;

போட்டோர் கணக்கு புறப்பட் டிருக்கிறார்
புதுவலி வோடும், பொலிவொடும் இன்றே!
ஊட்டி வளர்க்கும் தாயைப் போலவே
உறவு கொண்டாடி உலாவரு கின்றார்!
நாட்டுக்கும் மக்கட்கும் இவர்கள் செய் திட்ட
"நன்மைகள் ஆயிரம் கோடி? கோடியோ?
ஆட்டிப் படைக்கும் நடுவண் அரசின்
அடிவருடிக் கொள்ளை யடிக்கத் துடிக்கிறார்!

எத்தனைக் காலந்தான் ஏமாற்று வாரிவர்,
உம்மையும் இந்த உலகந் தன்னையும்?
ஒத்தூதி இன்றே, ஒருசிலர் இவர்க்கே
ஒக்கத் தாளம் போடவும் முனைகிறார்!
பித்தம் தெளிய மருந்து கண்டு
பிடித்தது போலுமைப் பிடித்த மடம் நீக்கிச்
சித்தம் தெளிவிக்க பெருஞ்சித் திரனார்
அணியில் சேர்ந்து திருப்பெற வருவீர்!

## உருசியாவிலும் இந்தியா!

'இந்தியாவும்' உருசியாவும் இந்திரா காலத்திலிருந்து மிக நெருக்கமாகப் பழகி வருவது அனைவர்க்கும் தெரிந்ததே!

அவ்வாறு பழகப்பழக இந்தியாவில் உள்ள அனைத்துத் தீமைகளும் அங்கு பரவத் தொடங்கியுள்ளன! இங்குள்ள புராணங்கள், இதிகாசங்கள்-போலும் பொய் புனைசுருட்டுகளும், ஆரிய ஏமாற்றுகளும் உருசியா மக்களையும் ஆட்கொண்டு விட்ட செய்திகள் வெளிப்படை.

அத்துடன், இந்தியாவில் உள்ள அரசியல் ஊழல்களும் அங்குப் பரவி வருவதாகச் செய்திகள் வந்துள்ளன; உருசியாவில் ஆண்டுக்கு 14,500 கோடி அமெரிக்கன் டாலர் மதிப்பளவில் கருப்புப் பணம் புழங்குகிறதாம். மருத்துவமனைகளிலும் போக்குவரத்திலும் தொழிலகங்களிலும் கையூட்டுகள் மிகுந்து விட்டனவாம்.

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 27**

குருடனால் நல்ல ஒளியை உணர முடியாது; கொடுங்கோலனால் நல்ல ஆட்சியைத் தரமுடியாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 109;

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5;

TN/MS (C) 657